بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*
*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*
*அவர்கள் 10.11.2017 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

## தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு கவிதையில் கூறுகின்றார்கள் :

இது மஸீஹின் காலமாக இருந்தது. வேறு எவருடைய காலமாகவும் இருக்கவில்லை. நான் வராமல் இருந்திருந்தால் வேறு எவராவது வந்திருப்பார்.

முஸ்லிம்கள் கடந்து சென்று கொண்டிருந்த அந்த காலம் வேதனையுடைய, முஸ்லிம்களுக்கு மிகவும் நிம்மதியிழக்கச் செய்யக்கூடிய ஒரு காலமாக இருந்தது. இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கிறித்தவர்களாக ஆகி விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கிணங்க எப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருந்ததென்றால் ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றடைந்திருந்தது. செயல் அளவில் முஸ்லிம்களிடத்தில் மார்க்கமும் எஞ்சியிருக்கவில்லை. இஸ்லாத்தின் உண்மைத்துவம் எஞ்சியிருக்கவில்லை. இஸ்லாத்திற்காக வேதனை கொண்டவர்கள் ஏதேனும் மஸீஹ் வந்து தத்தளித்துக் கொண்டிருக்கின்ற இஸ்லாத்தின் கப்பலை காப்பாற்ற வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அதில் ஒரு சான்றோர் ஹஸ்ரத் லூதியானாவைச் சார்ந்த சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களும் ஒருவர் ஆவார்கள். தொலைதூரம் வரை அவர்களது புகழ் பரவி இருந்தது. அவர்களுக்கென்று ஏராளமான சீடர்கள் இருந்தனர். அவர்களின் உயர் அந்தஸ்தின் காரணமாக ஜம்முவின் மஹாராஜா, நீங்கள் ஜம்மு வந்து எனக்காக துஆ செய்யுங்கள் என்று அன்னாரிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் அன்னார் நிராகரித்து விட்டார்கள். மேலும் துஆ செய்ய வேண்டுமென்றால் என்னிடம் வாருங்கள் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், பெரிய பெரிய மனிதர்கள் அவர்களின் சீடர்களாக இருந்தார்கள். ஆரம்பத்திலிருந்தே சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு ஆழமான கொள்கை பிடிப்பு இருந்தது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அப்போது வாதம் செய்திருக்கவில்லை. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய வாதத்திற்கு முன்பே அன்னார் வஃபாத் ஆகி விட்டார்கள். அவர்கள் அந்த காலத்தினுடைய நிலைமையக் கண்டு ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், நோயாளியாகிய எங்களின் பார்வை உங்களின் மீதே இருக்கின்றது. இறைவனுக்காக நீங்கள் மஸீஹாவாக ஆகுங்கள் என்று கூறினார்கள். எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்திற்கு முன்பே அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். ஆனால் அன்னார் தான் இக்காலத்தின் இமாமும், வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஆவார்கள் என்ற நிச்சய உறுதி இருந்தது. எனவே தான் அவர்கள் தமது சந்ததிகளுக்கும், சீடர்களுக்கும் எப்போது வாதம் செய்யப்பட்டாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தி இருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும், நுட்பமான ஞானமுடையவர்கள், சான்றோர்கள், இஸ்லாத்தினுடைய தத்தளித்துக் கொண்டிக்கும் கப்பலை இந்த காலத்தில் ஒருவரால் காப்பாற்ற முடியும் என்றால் அது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களாலேயே முடியும் என்று அறிந்திருந்தனர். ஏனென்றால், அன்னார் பராஹீனே அஹ்மதிய்யாவை எழுதி இஸ்லாத்தின் எதிரிகளின் வாயை அடைத்தார்கள். அன்னாரது புத்தகங்கள், விவாதங்கள் போன்றவைகளுக்கு இஸ்லாத்தின் எதிரிகளால் பதிலளிக்க இயலவில்லை. அன்னார் வாதம் செய்யாத வரை பெரும் பெரும் ஆலிம்கள் அன்னாரின் கொள்கைகளை ஏற்று வந்தனர். ஆனால் அல்லாஹ்வினுடைய கட்டளையினால் அன்னார் வாதம் செய்த போது அதே ஆலிம்கள் தனது சுயநலன்களின் காரணமாக அன்னாரை எதிர்க்க ஆரம்பித்தனர். இன்று வரை அதே சுயநல ஆலிம்கள் தான் அன்னாரை எதிர்த்து வருகின்றனர். மேலும் முஸ்லிம்களின் உள்ளத்திலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரது ஜமாஅத்திற்கு எதிராக வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது எண்ணற்ற எழுத்துக்கள், சொற்பொழிவுகள் மற்றும் சபைகளில் தனது வாதம் உண்மையானது என்பதற்கான சான்றுகளை வழங்கினார்கள். காலத்தின் தேவைக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகை மேலும் அன்னாருக்கு கிடைக்கும் இறை உதவிகள் போன்றவற்றை எடுத்துக் கூறினார்கள். தூய உள்ளம் கொண்டவர்களுக்கு புரிந்து விட்டது. ஆனால் எவர்களின் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி இருந்ததோ, சுயநலம் இருந்ததோ அவர்களுக்கு புரியவில்லை.

இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சொற்களிலேயே சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். இதை அன்னாரே கூறியுள்ளார்கள்:

இப்போது நமது வாதத்தை விட்டு விடுங்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும். என்னைப் பொய்ப்படுத்தினீர்கள் என்றால் இஸ்லாத்தை கைநழுவ வேண்டியது வரும் என்பதற்கு சிந்தித்து பதில் தாருங்கள். என்னை பொய்ப்படுத்துவீர்கள் என்றால் இஸ்லாத்தை விட்டும் தூரம் செல்வீர்கள். நான் உண்மையாகவே கூறுகின்றேன். திருக்குர்ஆனின் வாக்குறுதிக்கேற்ப அல்லாஹ் தனது மார்க்கத்தை பாதுகாத்தான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பு நிறைவேறியது. ஏனென்றால்

சரியான நேரத்தில் இறைவனுடைய வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்செய்திகளுக்கேற்ப இறைவன் இந்த ஜமாஅத்தை நிறுவினான். மேலும் சதகல்லாஹு வ ரஸூலுஹு அதாவது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் கூற்றுகள் உண்மை என்பது நிரூபணமாகி விட்டது. எவர் இதை நிராகரிக்கின்றாரோ அவர் அநீதியின் இயல்பை உடையவராவார்.

அன்னார் 1903 ஆம் ஆண்டு இதை கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் வாதம் செய்து 22 ஆண்டுகள் கடந்து விட்டன. அல்லாஹ்வின் உதவிகள் என்னோடு இருக்கின்றன. நான் பொய்யனாக இருந்தால் பிறகு இறைவன் புறமிருந்து எனக்கு ஏன் உதவிகள் கிடைக்கின்றன? இரண்டாவது, காலமும் எதிர்பார்க்கின்றது. மேலும் இந்த காலத்தில் மஸீஹ் வர வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆக, தேவை இருக்கும் போது நான் இல்லையென்றால் பிறகு இன்னொருவரை முன்னிலைப்படுத்துங்கள். எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்கு ஒரு சீர்திருத்தவாதி வர வேண்டும். ஏனென்றால் இக்காலத்தில் குழப்பம் உச்ச நிலையை அடைந்துள்ளது. மேலும் முஸ்லிம்களிலும் குழப்பம் உச்ச நிலையில் உள்ளது. ஆக, என்னை பொய்யர் என்று கூற வேண்டுமென்றால் அதற்கு இரண்டு நிலைகள் மட்டுமே உள்ளன. ஒன்று, வேறொரு சீர்திருத்தவாதியை காட்ட வேண்டும். ஏனென்றால், காலம் ஒரு சீர்திருத்தவாதியை எதிர்பார்க்கின்றது. அல்லது அல்லாஹ்வின் வாக்குறுதிகளை பொய்ப்படுத்த வேண்டும். அவனுடைய வாக்குறுதிகள் பொய்யானவையாக இருந்தன என்று கூறுங்கள். ஏனென்றால், இதுபோன்ற சீர்கெட்ட நேரத்தில் ஒரு சீர்திருத்தவாதியை அனுப்புவேன் என்று அல்லாஹ் கூறி இருந்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மார்க்கத்தை பாதுகாப்பது எந்நிலையிலும் அவசியமானதாகும். சிலர் மார்க்கத்தை பாதுகாக்க தேவையில்லை என்று கூறுகின்றனர். அவர்கள் பெரும் தவறிழைக்கின்றனர். இப்போது அதன் தேவை ஏற்பட்ட போது அவன் என்னை அனுப்பினான். நிலைமைகளும் தேவைகளும் எதிர்பார்க்காமல் இருந்திருந்தால் ஒருவேளை இந்த பாதுகாத்தல் சந்தேகத்திற்குரியதாக இருந்திருக்கலாம். அல்லது நிராகரிக்க முடிந்திருக்கலாம். அவ்வாறு நிலைமை மோசமானதாக இல்லாமல் இருந்திருந்தால் காலத்தின் எதிர்பார்ப்பு இல்லாமல் இருந்திருந்தால் நான் தவறான நேரத்தில் வந்துள்ளேன் என்று உங்களால் கூற முடியும். மேலும் இந்த நூற்றாண்டில் கண்டிப்பாக முஜத்தித் வர வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களோடு ஒப்புமை இருக்கும் பட்சத்தில் இந்த நூற்றாண்டின் முஜத்தித் மஸீஹாக இருக்க வேண்டியது அவசியமானதாக இருந்தது. ஏனென்றால் மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு பிறகு 14 வது நூற்றாண்டில் வந்தார்கள். இப்போதும் 14 ஆம் நூற்றாண்டு ஆகும்.

பிறகு நீங்கள் என்னை பொய்ப்படுத்துகின்றீர்கள் என்றால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரை பொய்ப்படுத்துவதாகும் என்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னை மறுப்பது உண்மையில் என்னை மறுப்பது அல்ல. மாறாக, அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களை மறுப்பதாகும். ஏனென்றால் எவர் என்னை பொய்ப்படுத்துகின்றாரோ அதன் மூலம் அவர் நவூதுபில்லாஹ் அல்லாஹ்வை பொய்ப்படுத்துகின்றார். அக மற்றும் புற குழப்பங்கள் உச்சத்தை அடைந்திருப்பதை அவர் கண்ட பிறகும் கூட மேலும் அல்லாஹ், இன்னா நஹ்னு நஸ்ஸல்னஸ் ஸிக்ர வ இன்னா லஹூ லஹாபிலூன் என்ற வாக்குறுதிக்கேற்ப பாதுகாப்பிற்கான எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை என்று கூறுகிறார். அதாவது அல்லாஹ் கிலாஃபத் பற்றிய வசனத்தில் மூஸாவினுடைய உம்மத்தைப் போன்று இந்த முஹம்மதிய்ய உம்மத்திலும் கலீஃபாக்களின் தொடரை ஏற்படுத்துவான் என்று வாக்குறுதி அளித்துள்ளான் என்ற கொள்கையை அவர் வெளிப்படையாக கொண்டவராக இருக்கின்றார். ஆனால் அல்லாஹ் அந்த வாக்குறுதியை பூர்த்தி செய்யவில்லை. மேலும் இப்போது எந்த கலீஃபாவும் வரவில்லை என்று கூறுவது எதுவரை எடுத்துச் செல்லும் என்றால் திருக்குர்ஆனில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களோடு ஒப்பிட்டு கூறியது சரியல்ல என்ற கூற வேண்டியது வரும்– அல்லாஹ் பாதுகாப்பானாக. எனவே முழுமையான ஒப்புமைக்கு மூஸாவின் உம்மத்தில் 14 –ஆம் நூற்றாண்டில் ஒரு மஸீஹ் வந்ததைப் போன்று இந்த உம்மத்திலும் 14 –ஆம் நூற்றாண்டில் ஒரு மஸீஹ் வரவேண்டியதிருந்தது.

பிறகு அவ்வாறே ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகு பிஹிம் என்ற வசனத்தையும் மறுக்க வேண்டியது வரும். மேலும் அவ்வாறே திருக்குர்ஆனின் வேறு பல வசனங்களையும் பொய்ப்படுத்த வேண்டியது வரும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மீண்டும் சிந்தியுங்கள். என்னை பொய்ப்படுத்துவது ஒரு சாதாரண விஷயமா ? இதை நான் கூறவில்லை. மாறாக, இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இதுவே உண்மையாகும். எவர் என்னை விடுவாரோ, மேலும் என்னை பொய்ப்படுத்துவாரோ அவர் நாவினால் அவ்வாறு செய்யாவிட்டாலும் அவர் செயல் அளவில் முழு குர்ஆனையும் பொய்ப்படுத்தி விட்டவர் ஆவார். அவர் இறைவனை விட்டு விட்டவர் ஆவார். பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னை பொய்ப்படுத்துவது என்பது உண்மையில் என்னைப் பொய்ப்படுத்துவதல்ல. மாறாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்துவதாகும். ஒருவர் என்னை பொய்ப்படுத்த துணிவதற்கு முன்பு தனது உள்ளத்தில் சற்று சிந்திக்கட்டும். மேலும் அவர் யாரை பொய்ப்படுத்துகிறார் என்று அவரது உள்ளத்திடமே அவர் ஃபத்வா கேட்கட்டும்.

அன்னாரை பொய்ப்படுத்துவதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எவ்வாறு பொய்ப்படுத்துதலாகும் என்பது தொடர்பாக மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு முஜத்தித் வருவார் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாக்குறுதி வழங்கியிருந்தார்கள். அது பொய்யானது. பிறகு அன்னார் இமாமுக்கும் மின்கும் அதாவது உங்களிலிருந்தே உங்களுக்கு இமாமாக இருப்பார் என்று

கூறியதும் தவறாகும்—அல்லாஹ் பாதுகாப்பானாக. மேலும் சிலுவை குழப்பத்தின் காலத்தில் ஒரு மஸீஹைப் பற்றிய நற்செயத்தி வழங்கியதும் தவறானதாகி விட்டது—நவூதுபில்லாஹ். ஏனென்றால் குழப்பம் இருக்கின்றது. ஆனால் வர வேண்டிய அந்த இமாம் இன்னும் வரவில்லை. ஆக, இது போன்ற விஷயங்களை ஒருவர் ஏற்றுக் கொள்கின்றார் என்றால் அவர் செயல் வடிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்துகின்றாரா? இல்லையா?

நான் உங்களுக்கு விளக்கமாக கூறுகின்றேன். என்னை பொய்ப்படுத்து என்பது சாதாரண விஷயமல்ல. என்னை காஃபிர் என்று கூறுவதற்கு முன்பு நீங்கள் காஃபிராக வேண்டியது வரும். என்னை மார்க்கமற்றவன் என்றும் வழிதவறியவன் என்றும் கூறுவதற்கு தாமதமாகும். ஆனால் அதற்கு முன்பு உங்களுடைய வழிகேட்டை ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். என்னை திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை கைவிட்டு விட்டவன் என்று கூறுவதற்கு முன்பு உங்களுக்கு திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை கைவிட வேண்டியது வரும். பிறகும் அவரே விடுவார். நான் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை மெய்ப்படுத்தவே வந்துள்ளேன். நான் வழிதவறியவன் அல்ல. மாறாக, நேர்வழி வழங்குபவனே ஆவேன். நான் காஃபிர் அல்ல. மாறாக, மூஃமின்களில் முதன்மையானவனைப் போன்றவன் ஆவேன். நான் கூறுகின்ற அனைத்தும் உண்மையாகும். அதை இறைவன் எனக்கு வெளிப்படுத்தி இருக்கின்றான். எவருக்கு இறைவன் மீது நம்பிக்கை இருக்குமோ, மேலும் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளர் என்று ஏற்றுக் கொண்டுள்ளாரோ அவர் நான் கூறுவதை கேட்டு அமைதியாக இருப்பதே அவரின் மீது அத்தாட்சி முழுமையடைதல் ஆகும். ஆனால் எவர் (எதிர்ப்பதில்) துணிபவராகவும், துரதிஷ்டவாதியாகவும் உள்ளாரோ அவருக்கு என்ன சிகிச்சை செய்வது? அல்லாஹ்வே அவருக்கு புரிய வைப்பான்.

பிறகு மஸீஹின் வருகை பற்றிய ஒரு சில அடையாளங்களைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் :

உண்மையில் இந்த ரயில்வே மஸீஹ் மவ்வூதின் அடையாளமாகும். திருக்குர்ஆனிலும் இது தொடர்பான சைகை உள்ளது. வ இதல் இஷாரு உத்திலத் அதாவது பத்து மாத கர்ப்பிணி பெண் ஒட்டகங்கள் கைவிடப்படும் போது என்று வந்துள்ளது. ல யுத்ரகன்னல் கிலாஸு அதாவது ஒட்டகங்கள் கைவிடப்படும் போது என்பதில் ரயில் பற்றிய முன்னறிவிப்பு இருப்பதை சிந்திப்பவர்கள் உணர முடியும். இதன் பொருள் ரயில் இல்லையென்றால் பிறகு ஒட்டங்கள் எதனால் கைவிடப்பட்டது என்கின்ற சம்பவத்தை அவர்கள் கூற வேண்டும். முந்தைய வேதங்களிலும் கூட முன்னறிவிப்பு உள்ளது. அதாவது அந்த காலத்தில் போக்குவரத்து எளிதாகி விடும். உண்மை என்னவென்றால், எந்த அளவுக்கு அடையாளங்கள் நிறைவேறி விட்டதென்றால் இவர்கள் இந்த மைதானத்தை விட்டே ஓடி விட்டனர். மஹ்தியின் அடையாளமாக குறிப்பிடப்பட்டிருந்த சூரிய சந்திர கிரகணங்கள் ரமலான் மாதத்தில் வெளிப்படவில்லையா? அதே போன்று வாகனங்களும் வந்து விட்டன. இந்த அடையாளங்கள் கூறுவது என்னவென்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்து விட்டார். இவர்கள் நம்மை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் பிறகு வேறொருவரை தேட வேண்டும். மேலும் அவர் யார் என்று கூற வேண்டும். ஏனென்றால் கூறப்பட்ட அனைத்து அடையாளங்களும் பூர்த்தியாகி விட்டன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: என்னை பரிசோதிக்க வேண்டுமென்றால் நபித்துவ வழியில் பரிசோதிக்க வேண்டும். பிறகு உண்மை யாரோடு இருக்கிறது என்பதை பாருங்கள். கற்பனையான தத்துவங்கள் மற்றும் ஆலோசனைகளால் ஒன்றும் நடக்காது. மேலும் நானும் கற்பனையான விஷயங்களைக் கொண்டு என்னை உண்மைப்படுத்தவில்லை. நான் எனது வாதத்தை நபித்துவ வழியில் எடுத்து வைக்கின்றேன். அவ்வாறிருக்க அதே தத்துவத்தின் அடிப்படையில் அந்த வாதத்தை பரிசோதிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? எவர் மனம் திறந்து எனது விஷயங்களை கேட்பாரோ நிச்சயமாக அவர் பலன் பெறுவார். மேலும் ஏற்றுக் கொள்வார். ஆனால் எவர் உள்ளத்தில் கருமித்தனம் மற்றும் காழ்ப்புணர்ச்சியை கொண்டுள்ளாரோ அவருக்கு என்னுடைய விஷயங்கள் எவ்வித பயனையும் அளிக்காது. அவர்களின் உதாரணம் ஒன்று இரண்டாக காட்சியளிக்கக்கூடிய பார்வை குறையுடைய மனிதரைப் போன்றதாகும். அவருக்கு எல்லாம் இரண்டாகத் தெரியும். அவருக்கு எந்த அளவுக்கு ஆதாரங்களை வழங்கினாலும் இரண்டு அல்ல; ஒன்று தான் என்று கூறினாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

அடையாளங்கள் தொடர்பாக மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: **முதலில்** திருக்குர்ஆன் மற்றும் தவ்ராத்தின் முன்னறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களோடு ஒப்புமை உடையவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். அந்த ஒப்புமைக்கு மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், இதற்கு முன்னரும் கூறப்பட்டது போன்று மூஸாவின் உம்மத்தில் அன்னாருக்கு பிறகு கலீஃபாக்களின் தொடர் இருந்தது போன்று இங்கும் வர வேண்டியது இருந்தது. வேறு எந்த ஆதாரங்கள் இல்லாமல் இருந்தாலும் கூட இந்த ஒப்புமையானது இயல்பாகவே ஒரு கலீஃபாக்களின் தொடர் இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது. **இரண்டாவதாக,** கிலாஃபத் பற்றிய வாக்குறுதி வழங்கிய அந்த வசனத்தில் அல்லாஹ் கிலாஃபத்தின் தொடரை உருவாக்குவதாக வாக்குறுதி வழங்கியுள்ளான். மேலும் அந்த தொடரை முந்தைய கிலாஃபத்தின் தொடரோடு ஒத்ததாக கூறி இருக்கின்றான். கமஸ்தஹ்ல ஃபல்லதீன மின் கப்லிஹிம் என்று கூறியுள்ளான். இந்த கிலாஃபத் பற்றிய முன்னறிவிப்புள்ள வசனத்திற்கேற்ப இந்த ஒப்புமைக்கு மிக முக்கியமானது என்னவென்றால், மூஸாவின் உம்மத்தில் காத்தமுல் குலஃபாவாக மஸீஹ் வந்ததைப் போன்று இந்த உம்மத்திலும் காத்தமுல் குலஃபாவாக வர வேண்டியதிருந்தது. **மூன்றாவது விஷயம்,** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இமாமுகும் மின்கும் என்று கூறியுள்ளார்கள். அதாவது உங்களிலிருந்தே உங்களுக்கு இமாமாக இருப்பார். **நான்காவது விஷயம்,**

ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு முஜத்தித் தோன்றுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே இந்த நூற்றாண்டிலும் ஒரு முஜத்தித் வர வேண்டியது அவசிமயமாக இருந்தது. மேலும் அக்காலத்திலுள்ள குழப்பங்களை சீர்திருத்துவதே முஜத்திதின் பணியாகும். எனவே இக்காலத்தில் அதிகமாக இருக்கக்கூடிய குழப்பம் கிறித்தவ குழப்பமாகும். எனவே இந்த காலத்தின் முஜத்தித் சிலுவையை முறிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். அவருடைய இன்னொரு பெயர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகும். **ஐந்தாவது விஷயம்** என்னவென்றால், மூஸாவின் கிலாஃபத்தின் ஒப்புமையின் அடிப்படையில் காத்தமுல் குலஃபா இந்த உம்மத்தின் 14 ஆம் நூற்றாண்டில் வர வேண்டியது இருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிலிருந்து 14 ஆம் நூற்றாண்டில் தான் மஸீஹ் (அலை) அவர்கள் வந்தார்கள்.**ஆறாவது விஷயம்** என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்காக சொல்லப்பட்டதிருந்த விஷயங்களில் பெரும்பாலானவை நிறைவேறி விட்டது. உதாரணமாக, ரமலானில் சூரிய சந்திர கிரகணங்கள் இரண்டு முறை நடைபெற்று விட்டது. ஹஜ் தடை செய்யப்படுதல், சுஸ் சின்னீன் என்ற நட்சத்திரம் வெளிப்படுதல், ப்ளேக் நோய் பரவுதல், ரயில் கண்டுபிடிப்பு, ஒட்டகங்கள் கைவிடப்படுதல் போன்றவை. **ஏழாவது விஷயம்** என்னவென்றால், சூரா ஃபாத்திஹாவின் துஆவிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் வரக்கூடியவர் இந்த உம்மத்திலிருந்து வருவார்.

சுருக்கமாக, ஒன்று இரண்டு அல்ல. மாறாக, நூற்றுக்கணக்கான சான்றுகள் உள்ளன. அதாவது வரக்கூடியவர் இந்த உம்மத்திலிருந்து தான் வர வேண்டும். மேலும் வர வேண்டிய நேரமும் இதுவே ஆகும். இறைவனுடைய இல்ஹாம் மற்றும் வஹீயின் மூலமாக நான் கூறுகின்றேன். வர இருந்தவன் நானே ஆவேன். ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ் நபித்துவ வழியில் வழங்கி இருக்கக்கூடிய ஆதாரங்களை எவர் விரும்புகின்றாரோ அவர் பெற்றுக் கொள்ளட்டும். எனக்கு ஆதரவாக வெளிப்பட்ட ஆதாரங்களை பாருங்கள். எதிரிகளின் நிலையைக் கண்டு எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகின்றது. அவர்கள் எதையெல்லாம் அடையாளமாக கூறி வந்தார்களோ அவை நிறைவேறிய போது அதன் உண்மைத்தன்மை பற்றி ஆட்சேபிக்கின்றனர். உதாரணமாக, ஆரம்பத்தில் சூரிய சந்திர கிரகண அடையாளத்தை கேட்டு வந்தனர். இப்போது அவர்கள் அந்த ஹதீஸ் சரியானதல்ல என்கின்றனர். ஆனால் எவரேனும் அவர்களிடத்தில் எதை இறைவன் சரியானதாக நிரூபித்திருக்கின்றானோ அது அவர்கள் கூறுவதனால் பொய்யாகி விடுமா ? என்று கேட்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால் இதனால் நாம் மஸீஹை பொய்ப்படுத்தவில்லை. மாறாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பொய்ப்படுத்துகின்றோம் என்பதற்காக வெட்கப்படவும் இல்லை. என்னுடைய உண்மைக்கு ஆதரவாக சூரிய சந்திர கிரகணம் மட்டுமல்ல. மாறாக, ஆயிரக்கணக்கான சான்றுகளும் சாட்சியங்களும் உள்ளன. ஒன்று இல்லாவிட்டாலும் கூட ஒன்றும் கெட்டுப்போகப் போவதில்லை. ஆனால் இந்த முன்னறிவிப்பு பொய் என்று கூற முடியாது. வருத்தம் என்னவென்றால் இவர்கள் என்னை எதிர்ப்பதற்காக உண்மையாளர்களின் தலைவரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை பொய்யாக்க முயற்சிக்கின்றனர். நான் இந்த முன்னறிவிப்பை மிக வலுவோடு வைக்கின்றேன். ஏனென்றால் இது நமது எஜமானரின் உண்மைத்துவத்திற்கு சான்றாகும். எனவே கணிப்பின் மை கொண்டு எழுதிய ஹதீஸ்களை சம்பவம் நிகழ்ந்தேறி உண்மைப்படுத்தியது. இப்போது அதை நிராகரிப்பது நம்பிக்கையற்றதும், சாபத்திற்குரியதும் ஆகும். ஹதீஸ்களை ஆராய்பவர்கள் நாங்கள் திருடர்களை பிடித்து விட்டோம் என்றா கூறுகின்றனர். இல்லை. மாறாக, எந்த ஹதீஸ்கள் சரியில்லையோ அது தொடர்பாக இன்ன நபரின் நினைவாற்றல் சரியில்லை. மேலும் அவரின் உண்மைத் தன்மையில் சற்று சந்தேகங்கள் உள்ளன என்றே கூறுவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒரு ஹதீஸ் வெளிப்படையாக பலகீனமானதாக இருந்தாலும் கூட அதன் முன்னறிவிப்பு நிறைவேறி விட்டால் பிறகு அது சரியானதாகி விடுகின்றது என்பதை ஹதீஸ் வல்லுனர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்த அடிப்படையில் இந்த ஹதீஸ் சரியானது இல்லை என்று கூற எவ்வாறு துணிச்சல் வரும் ?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் இந்த விஷயங்கள் சுருக்கமாக கூறியுள்ளேன். இதை நீங்கள் சிந்தித்து பாருங்கள். இறைவனிடம் துஆ செய்யுங்கள். அவன் வல்லமையுள்ளவன் ஆவான். ஏதேனும் வழியை திறப்பான். அவனது உதவி ஒத்தாசைகள் உண்மையாளர்களுக்கே கிடைக்கின்றன. உண்மையை அறிய வேண்டுமென்றால் பிறகு இறைவனிடத்தில் தொழுகையில் துஆ கேளுங்கள். மனிதன் வெறுப்பு மற்றும் பிடிவாதத்தை விட்டு விலகி உண்மை வெளிப்படுவதற்காக இறைவன் பக்கம் கவனம் செலுத்தினால் நாற்பது நாட்கள் முழுமையடைந்திருக்காது அதற்கு முன்பே அவருக்கு உண்மை வெளிப்படும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். உண்மையை தேடுவதற்காக தூய உள்ளத்தோடு தேடினால் நிச்சயம் வெளிப்படும். ஆனால் மிக குறைவானவர்களே இந்த நிபந்தனையோடு இறைவனிடத்தில் தீர்ப்பை எதிர்பார்க்கின்றனர். தங்களுடைய குறைமதி மற்றும் வெறுப்பு மற்றும் பிடிவாதத்தின் காரணமாக இறைவனுடைய வலியை மறுக்கின்றனர். அதன் காரணமாக ஈமானை வீணாக்கி விடுகின்றனர்.

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் மவ்லவிகளின் பேச்சில் விழாதிருப்பார்களாக. தங்களது அறிவை பயன்படுத்துவார்களாக. மேலும் கலப்பற்ற முறையில் இறைவனிடம் உதவியை நாடுபவர்களாக திகழ்வார்களாக. அல்லாஹ் அவர்களது உள்ளத்தை திறப்பானாக. மேலும் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு இன்றைய நாட்களில் முஸ்லிம் உலகம் சிக்கித் தவிக்கும் வித்தியாசமான இந்த நிலையிலிருந்து வெளி வருவார்களாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
on 17.11.2017
Translated by Moulavi M.B.Tahir Ahmad
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516